ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத ஸ்ரீ சந்திரமௌளீச்வராய நம:

# ஆர்ய தர்மம்.

யானைக்கும் அடி சறுக்குவதுபோல் ஸுஸ்திரமாக நிலைநாட்டப்பட்ட நம் ஸநாதனதர்மம் நிலைதப்பி நிற்பது ஆச்சரியத்திலும் ஆச்சரியம். பரமேச்வரனைப் பெரியதோர் அவலம்பமாகக்கொண்டு கிளம்பி, ப்ரம்மாதிகளால் பாதுகாக்கப்பட்டு மஹரிஷிகளால் விரிக்கப்பட்டு வளர்ந்தோங்கிய நம்முடைய க்ஷேமாபிவிருத்திக்காக நம்முடைய அனுபவத்தில் விடப்பட்டிருக்கும் தர்மமார்க்கம் நம்முடைய கவனக்குறைவினாலேயே இந்த நிலைமைக்கு வந்ததேயன்றி வேறில்லை. இவ்வளவு ஹீநஸ்திதிக்கு வந்த பிறகாவது தர்மமார்க்கத்தின் பரிதாபநிலையைக்கண்டு அதை நிவர்த்திக்க சக்தியற்றவர்களாயிருந்தாலும் அந்ததர்மமார்க்கத்தை ஸ்தாபித்தவர்களிடமாவது முறையிட முன்வந்தார்களா? தர்மமார்க்கம் தலையெடுக்கமுடியாமல் ஆய்விட்டதே என்று வருத்தப்பட்டார்களா? ஒன்றுமில்லை. அம்மட்டோடிராமல் ஸநாதனதர்மிகளின் ஸந்ததியிற் பிறந்தவர்களே அந்த தர்மவிரோதிகளோடு சேர்ந்துகொள்வதும், ஸநாதனதர்மாவலம்பிகளை நசுக்கி தர்மத்தை நசிப்பிக்கக் கூட்டம் கூட்டுவதும், அதர்மத்தைத் தர்மமென்று ஆர்யச்சிறுவர்கள் மதிமயங்கும்படி போதிப்பதும், இதுவே தற்கால நாகரீகமென்று தம் கோஷ்டியில் சந்தோஷப்படுவதும், இவைகளாலெல்லாம் நம் பாரதநாடு முன்னேற்றத்தையடைந்துவிட்டதாகநினைப்பதும் பெரியகார்யமென்று நினைத்துப் பாடுபட்டுவருகிறார்கள், வைதிகர்களுக்கு வேததத்துவம், தர்மரஹஸ்யம் தெரியாதென்றும் கண்மூடித்தனமாகக் கர்நாடக வழக்கமொன்றைச் சொல்லிக்கொண்டு திரிகிறார்களென்றும் வாய்கூசாமல் கூறுகின்றனர். நம்முடைய ஸநாதனதர்மப்பிரமாணங்கள் பூராவும் ஸம்ஸ்கிருதபாஷாமயமாகவே இருக்கின்றன. அத்தகையகீர்வாணபாஷை அனேகமாயிக்காலத்தில் குன்றியது பாருங்கள்! அப்பாஷையிற் சிலர் தர்க்கம், வியாகரணம் முதலிய நூல்களையப்பியஸிக்கின்றார்களாயினும், அவர்களுக்கு அப்பாஷையில் ஒருவிதமான அறிவு உண்டாயிருக்குமாயினும் அவர்கள் தர்மநிச்சயத்தில் உபயோகப்படவில்லையென்றால் ஸம்ஸ்கிருதபாஷாஞானமேயில்லாமல் வயிறுவளர்க்க வெவ்வேறு பாஷையைக் கற்றுக்கொண்டு தர்மவாஸனையே இல்லாதவர்களின் தேசபாஷைப்படிப்பா தர்மநிர்ணயத்தில் உபயோகப்படும். அன்றியும் தர்க்கவியாகரணாதிகளைப் பாடசாலை போட்டுப் பயிலுவிப்பதுபோல் தர்மசாஸ்திர நூல்களைப் படிப்பில்இருக்கின்ற முறை எங்குமாதரிக்கப்படவில்லை. தர்மசாஸ்திர நூல்களைப் படிப்பவர் ஒருவரையுங் காணவுமில்லை. அதனாலேயே தர்மசாஸ்திரஞ் சொல்பவர் கணக்கிலகப்படாமலாய்விட்டனர். சுவடியைப்பார்த்து சொல்வதில்லையென்று வந்துவிட்டதனால் அவரவர்களுக்குத் தோன்றியதை அவரவர்கள் சொல்லிவருகிறார்கள். சிறிதுகாலமாகவே சாஸ்திரமின்றிச் சொன்னதும் சிஷ்டாசாரமாய் வந்துவிடுகிறது. அதனாற்றான் கேவலதர்மாசரணவிஷயமான உபநயனவிவாஹாதிகளில் அனுசியமான பல கார்யங்கள் நடத்தப்படுகின்றன, அதற்கெல்லாமிடங்கொடாமல் பிராசீனதர்மமார்க்கமே நிலைத்திருக்க யாவரும் வழி தேடுவார்களாக.

சுபம்,

பத்திராதிபர்.

ஸ்ரீ

௨

# ஆர்யதர்மம்.

பிரமோத-ஸ்ரு ஐப்பிசி-மீ ௧௪௨

## வர்ணாச்ரம ஸபைகள்.

ஸன்மதங்களை முன்னுக்குக் கொண்டுவரவேண்டிய சாஸ்திரங்களில் நல்ல விசுவாஸம் வைத்து அவைகளை ஸத்குரு முகமாக அப்பியஸித்த வித்வத்சிகாமணிகாள்! நமது ஸனாதனதர்மிகளின் உத்தேசங்களில் சிறிது தங்கள் கடாக்ஷத்தைச் செலுத்தும்படி கேட்டுக்கொள்கிறோம். இச்சமயம் ஸகல ஸத்கர்மங்களுக்கும் காலமிருத்யுபோன்ற கலிமஹாராஜன் ஏகாதிபத்தியம் வஹித்து வருவதால் ஸனாதனதர்மிகளின் உத்தேசங்களும், அவைகட்கு உரிய நன்முயற்சிகளும் இச்சமயத்தில் நடைபெறுவது மிகவும் அரிது. ஆனால் இவ்விஷயத்தை நீங்கள் அறிந்தேயிருப்பீர்கள். அப்படியிருந்தும் அவ்விஷயத்தில் சிறிது இங்கு கூறுவாம்.

பெரியதோர் மழைகாலத்தில் எங்கும் மேககர்ஜனத்தால் ஹம்ஸங்கள் கூவுதல் ஒழியவும், ஓயாது விழும் மழைத்துளிகளால் துளிர்களெல்லாம் முதிர்ந்தமையால் எங்கும் குயில் கூவுதல் தொலையவும், ஓயாத நீர் ஸம்பந்தத்தால் புஷ்பங்களில் தேன்கள் கரைந்திடவே அதனால் எங்கும் வண்டுகள் அடியுடன் ஒழியவும், நல்ல தொனியொன்றும் காதில்விழ இடமில்லாமலிருக்கும் நிலைமையில் அச்சமயத்திலும் எவரும் நினைக்கக்கூடாத ஏதோ ஒரு பாக்யவிசேஷத்தால் அன்னங்கள் கொஞ்சுவதையும், குயில்கள் கூவுவதையும், வண்டுகள் ரீங்காரம் செய்வதையும், யாதொரு உபத்திரவமுமில்லாமல் ரஸிகர்கள் கேட்டுவருகிறார்களென்றால் அது ஆச்சர்யமன்றோ! அவ்விதம் இச்சமயத்தில் சிலவர்ணாசிரம ஸபைகளும் ஆங்காங்கு தோன்றிவருகின்றன என்பது ஆச்சர்யமே. முன் நாளில் நம் தேசத்தில் தேசந்தோறும் பண்டித சபையும் ராஜ்யந்தோறும் ஆஸ்தானங்களும், கிராமந்தோறும் புஸ்தக

சாலைகளும், கிரஹஸ்தரும் பெரியோர்களும், பெரியோர்களிடத்தெல்லாம் சிஷ்யர்களும், ஒவ்வொரு மனிதரிடத்தும் வைதிக வித்தைகளும், வர்ணாசிரமதர்மங்களும் நிறைந்து விளங்கிற்றும்' அத்தகையகாலம் வெகுகாலத்திற்குமுன்னரே மாறிப்போயிற்று. இச்சமயத்தில் எல்லாம் விபரீதமாகவே காணப்படுகின்றது. எவ்வளவு கல்விப்பயிற்சியுள்ளவர்களாயினும் இந்நாட்டிலுண்டான துரவஸ்தையை வர்ணிக்க இயலாது. அப்படியிருந்தும் பரமேசவான் கருணாவிசேஷத்தாலும், முன்னோர் ஆசிர்வாத பலத்தாலும் பூர்வபுண்ணியத்தின் அம்சசேஷத்தாலும், பரமாசாரியாருடைய பராமர்ச விசேஷத்தாலும், வர்ணாசிரமத்தைப் பேசவென்றே சில ஸபைகளாவது ஆங்காங்கு ஏற்படுத்தப்பட்டிருப்பது நமது பாக்கிய பாரம்பரையின் பரிணமமேயாகும். நம்முன்னோர்களது விஜயத்வஜம்போல் தோன்றின. அச்சபைகள் ஆதரிக்குமாவலுள்ளவர்களின் குறைவால் தயங்கி நிற்கின்றனபோலும். அவைகளை ஆஸ்திககனவான்கள் ஆதரவுடன், வாக்காலாவது, பணத்தாலாவது, விருத்தி செய்விக்கும்படி எல்லா நல்லோரையும் பெரியோரையும் பிரார்த்திக்கின்றோம். தர்மானுஷ்டானத்தில் பல சம்சயங்கள் கிளம்பிவிட்டன. இந்த நிலைமையில் இதுதான் சமயமெனக் கருதி வர்ணாசிரம விரோதிகள் ஸம்சயங்களை விலக்கவேண்டிய நிச்சயங்களைத் தங்களுக்குத் தோன்றியவாறெல்லாம் சொல்லத் துணிந்துவிட்டார்கள். இவ்வளவு துரவஸ்தையும் தற்காலத்திய பண்டிதமணிகள் கெவனிக்கிறதில்லை. கவனிக்கும்படி நிர்ப்பந்தமாய்நேர்ந்துவிட்டாலும் நம்மாலென்னமுடியுமென்றும், நம்வாழ்நாட்களை எப்படியாவது தள்ளிவிட்டால்பின்னிட்டுஎப்படிவேணுமோ அப்படியாகட்டுமென்றும் செவிசாய்க்கக்கூடமனமில்லாமல் உபேக்ஷை செய்துவருகிறார்கள். லௌகிகர்களோ பண்டிதர்களை காட்டுகிறார்கள். பண்டிதர்களோ பணமில்லை என்கிறார்கள். நாளைக்குநாள் நிமிஷத்துக்குநிமிஷம் நம் ஆர்யச்சிறுவர்களிடம் காணப்படும் துராசார துர்நடத்தைகள் மிகக் கவலைக்கிடமாகின்றன. இம்மாதிரியேயானால் சிறிதுகாலத்திலேயே வர்ணாசிரமதர்மப் பேச்சே காதில் விழ இடமில்லாமல் போய்விடும். அப்படி உபேக்ஷித்துவிடாமல் எல்லோரும் அவரவரால் இயன்றமட்டும் உதவிபுரிந்து ஆதரித்து ஷை ஸபைகள் சிறப்புற்றோங்கி வளரும்படி செய்யவேண்டியது. இதற்குமேல் உத்தமமான புண்ணிய

மும் இல்லை. நம் மதவிருத்திக்கு வேறு சுலப உபாயமுமில்லை. இதைவிட சதாசாரஸ்தாபனம் வேறொன்றில்லை. ஆகையால் அச்சபைகளுக்கு இயன்றமட்டும் சகாயம் செய்து கலிதோஷங்களை வேறுடன் களைந்து வைதிகமத தர்மாசாரங்கள் இப்புண்யபூமியெல்லாம் பரவும்படி செய்வீர்களாக. சுபம் !

பத்திராதிபர்.

---

# பழைமையும் புதுமையும்.

(486-வது பக்கத்தொடர்ச்சி.)

அதுபற்றியேபுருடருக்கு உபநயநமென்றசம்ஸ்காரமொன்று விதிக்கப்பட்டிருக்கிறது. அது 5க்குமேல் 7வயதுக்குட்செய்யப்படுவது. அதுவே உபநயனஞ்செய்து பிரம்மோபதேசமளித்தற்குறிய காலமாக ஆரியசாஸ்திரங்கள்கூறுகின்றன, அதுபொருத்தமுடையதேயாம். யாது காரணமெனில், அதுவேகுழவிப்பருவம் கடந்து கௌமாரப் பருவத்துக்காரம்பமாம். அப்பொழுதுதான் காணுதிகளும் சரீரமும் இறுகிவலுத்து முதிற்சிபெறத் தொடங்குவது, அக்கால மனுதிகளைதைப்பற்றுகின்றதோ அது நன்கு வேரூன்றி நிலைபெறுவது நிச்சயம். உலகவிவகாரத்திற் புகுங்காலமும் அதுவேயாம். அக்காலம் சரீரத்தை எவ்வாறு சுவாதீனஞ்செய்ய வேண்டுமோ அவ்வாறெல்லாஞ் செய்துகொள்ளலாம். குழவிப்பருவத்தில் அதிக மலின ஸ்திதியிலிருப்பதாலும் முதிர்ந்தபின்னர் வசப்படாவாதலாலும் இடைநின்றவக்காலமே தகுதியுடைத்து யோகாப்பியாசாதி தியானங்களுக்குத் தக்கவாறு நாடிநரம்புகளை ஒழுங்குபடச்செய்வதற்கேற்ற காலம். அவ்வாறுபயின்று சிறந்து மேன்மைபெற்றவர்களே எமது நாட்டாரால் மகாரிஷிகள் என்று கொண்டாடப்பட்டவர்கள்;நிற்க, அவ்வுபநயனம் பெண்களுக்குமுண்டு; அதுதான் விவாகமென்ற சிறந்த சம்ஸ்காரமென்பது அப்பொழுதே பெண்களுக்கும் பிரமோபதேசஞ் செய்யப்படுகின்றது. அன்னிய நாட்டார் செய்யும் விவாகத்துக்கும் நமது தேசத்து விவாகத்துக்கும் மிகுந்த பேதம்உண்டு.

தேசாந்தரத்தில் விவாகமெனப்படுவது சிற்றின்பம் இஃதெனப் புலப்படுத்துவது அது விவாகமாகாது. அதைநமது தேசத்தில் நிஷேகமென்றும், கெருக்ஷியென்றுங் கூறுவது. விவாகத்துக்குக்குச் சிறிதும் சம்பந்தமில்லாத வேறொரு வைதிகக்கிரியையாகும். ஆரியர் விவாகமென்பது பேரின்பத்திற்கு மார்க்கமாகிய பிரமோபதேசந் தான். ஆகலால் ஆடவர்க்குப் பிரமோபதேசமென்பது காயத்திரி மகாமந்திரோபதேசமன்றோ? அங்ஙனம் பெண்களுக்கு காயத்திரி உபதேசிக்கப்படுதலில்லையே எனில் உண்டென்று நிச்சயமாய் நம்புக, ஆடவர்க்குச் சப்தமயமான பிரமத்தின் சொரூபத்தையுணர்த்தியதில் நிலைபெற்று நின்று பிரம சைதன்யமிஃதெனக் கண்டு வழிபடும் மார்க்கமுபதேசிக்கப்பட்டது. ஆடவாது மனமாதியந்தக்காரணங்கள் அங்ஙனம் தியானித்தறிதற்கேற்றவாறு அமைந்திருத்தலால் பெண்களுக்கு அஃதியலாமையானும் புலன்களுக்கு எட்டாப்பொருளைப்பற்றுதல் அவர்களது மனவியற்கையன்றாதலானும் ஸ்தூலஉருவைத் தரிசிப்பித்துப் பயிற்றுதலே மாபாதலானும் பெண்களுக்குத்தெய்வமெனத் தனது நாயகனைக்குறித்து அவனையே நாடோறும் வழிபடுக. அவன் திருவுருவன்றி மறுவுருவை நோக்கற்க, அவன் புகழையன்றிக்கேளற்க, அவனையன்றி வேறெதையும் கருதற்க, அவனது கட்டளைமீறி நடவற்க, அவனுரைக்கன்றி செவியற்க, அவனது நிந்தையை வினவற்க, அவனையன்றி வேறு பொருளிடத் தன்புசெலுத்தற்க, அவனது சுகமே நினது சுகம், அவனது துக்கமே யுனது துக்கம், அவனது வாழ்வே யுனதுவாழ்வு, அவனது தாழ்வே யுனது தாழ்வு, அவனே யுனது தெய்வம், அவனே குரு அவனே தலைவன், அவனே எல்லாமாகின்றான், அவனையன்றி யுனக்கு வேறு பொருளில்லை, அவனை மனமொழிமெய்களால் வழிபட்டுப் பாசபந்தமறுத்து வீடுபெற்றுய்கவென்று அவனையே சொரூபமாக உபதேசிக்கப்படுதலால் விவாகமே பெண்களுக்கு வீடுபேற்றுக்குக் காரணமான பிரமோபதேசமாயிற்று.

(தொடரும்)

வைதிகன்.

---

# ஆர்யதர்மமும் ஆர்யஸமாஜமும்.

இந்துமதமானது சுருதி ஸ்மிருதி இதிஹாஸபுராணங்களை மூலமாகக்கொண்டது. இக்காரணம்பற்றியே ஸநாதனமதமென்று பெயர் வழங்கப்பட்டுவருகிறது. இம்மதத்தில் அனுபவசுகம் பெற்றவர்கள் நமது முன்னோர்களான ரிஷிகளாம். இவர்கள் சத்திய, சௌச, தயா, தாக்ஷிண்ய, காருண்யாதி குணங்கள் நிறையப்பெற்றவர்கள். தங்களது அநுபவத்தில் வந்த சுகதுக்கங்களையே ஸ்மிருதிசாஸ்திரமாக இயற்றி அவ்வழியாகச் சென்று நம்மை நற்கதியடைய உபதேசித்திருக்கிறார்கள். உலகில் எவ்வளவோ பல தர்மதங்கள்தோன்றி மிகச்சக்திவாய்ந்ததாய் விளங்கி வந்த காலங்களிலும் நம் மதமானது ஆத்மசக்தியுடன் இதுநாள் வரையில் விளங்கிவருகிறதென்பது நிச்சயம். மஹாரிஷிகளின் ஆதரவே இம்மகிமைக்கு முக்ய காரணம். திவ்யசக்தி வாய்ந்த மகான்களே மதத்திற்கு ஜீவனாகிறார்கள். நம் மதத்திற்கு சாச்வத சக்திபலமும் அதனாலேயாம். ஆத்மசக்தியில்லாத புருடர்களைக் கொண்ட மதம் மிகச் சக்தியற்றதாம்.

நமது மதமானது திவ்விய சக்தியுள்ள ரிஷிகளையே முக்கிய ஜீவனாகப்பெற்றிருப்பதால் எம்மதத்திற்கும் சம்மதமாய், ஆதியாய் இன்னும் விளங்கிவருகிறது. இதனிடையில் தோன்றிய பல மதங்களும் சக்தியற்ற சாமான்ய புருஷ புத்திவிசேடத்தால் சிருட்டிக்கப்பட்டு அநாசார முறைகளையே கையாண்டுவந்தபடியால் அவைகள் ஜீவபலம் இல்லாமல் க்ஷீணித்துப்போனதாம். தருமவிருத்தமான முறையில் பிரகாசித்துவந்த பல மதங்களிலும் சமீபகாலத்தில் இந்துமத சத்துருவாய்த் தோன்றியிருப்பது "ஆரியஸமாஜம்" என்றதாம்.

இம்மதக் கொள்கை யாதெனில் இம்மதம் "தயாநந்த சரஸ்வதி" என்பவரால் ஏற்படுத்தப்பட்டடது. இவர் கூர்ஜா (Gujart) தேசத்தில் 'மோர்வி'ராஜாவின் சமஸ்தானத்தில் உத்தியோகத்தில் இருந்த விசிஷ்டபிராமணனின் குமாரர். இவர் 'சுக்லயஜுர்வேதி' என்று சரித்திரத்திலேயிருந்து தெரியவருகிறது. இவர் 1824-ம் வருடத்தில் பிறந்து 59வயது ஜீவித்திருந்தார். இவர் தகப்பனார்

விசிஷ்டவைதிகாசார விப்ரனாக இருந்தபடியால் விதிப்படி 8-வது வயதில் இவருக்கு உபநயநம் செய்து பிரும்மசர்ய விரதானுஷ்டானத்துடன் குருகுலவாஸம் செய்து வேதாத்தியயன சாஸ்திர பாடங்களைக் கற்க ஏற்பாடு செய்திருந்தார். தன் குமாரனை வைதிகசிரேஷ்டனாக்கவெண்ணி பாடுபட்டுவந்த முயற்சிகள் இவருக்கு நேர்விரோதமாக முடிந்தது.

இவரது 14-வது வயதில் இவரை ஓர் சிவக்ஷேத்திர தரிசனத்திற்காக அழைத்துப்போனார். அவ்விடத்தில் உபவாசமும், தூக்கமுமின்றி கண்விழிக்கவும் நேர்ந்தது. அப்போது தயானந்தர் பார்த்திருக்கும்போது தேவஸந்நிதியிலிருந்தநிவேதநத்தை மூஷிகமொன்று தின்று சிவலிங்கத்தின்மேலேறிச் செல்லக்கண்டார். அதுமுதற்கொண்டு விக்கிரஹாராதனையை வெறுத்தார்.

ஆசாரத்திற்கு நேர்விரோதமாகப்புத்திரன் வருவதைக்கண்ட பிதாவுக்கும், புத்திரனுக்கும் எப்பொழுதும் ஆசார அனாசார யுத்தம நடந்துவந்துகொண்டிருந்தது. 19-வது வயதில் இவருக்கு கலியாணத்திற்கு ஏற்பாடு செய்யவே இதையறிந்த தயானந்தர் அறியாமல் வெளியேறிவிட்டார். பிறகு தன் பிதாவைப் பார்த்ததில்லையாம். இவர் 'விரஜானந்தரின்' சிடர், ஐந்து வருடங்களில் மிகச் சக்தியுள்ளவராக வரவே இவரது நாஸ்திகவழியைக் கண்ட ஆஸ்திகர்கள் ஐந்து தடவை இவரைக் கொல்லமுயன்றார்களாம்.

இவர் வேதம், மனுஸ்மிருதி இவ்விரண்டையும் மாத்திரம் ஒப்புக்கொண்டவர். அவைகளிலும் தன் கொள்கைக்கு நேரிடையானவைகளை பிரக்ஷிப்தம் [எழுதிச்சேர்க்கப்பட்டது] என்று ஒப்புக்கொள்பவர்,

"விக்கிரஹாராதனம், க்ஷேத்திரதரிசனம், தீர்த்தயாத்திரை, பிதுருசிராத்தம்" இவைகளை பிராமணர்கள் தங்கள் பிழைப்புக்காகச் செய்துகொண்ட மோசடிகள் என்கிறார். இவர் 'பிரௌடா விவாஹத்தை (ருதுமதீவிவாஹத்தை) ஆதரித்தவர். பெண்கள் சுயம்வரம் செய்துகொள்ளவேணுமென்று சொல்லுகிறார்.

போட்டோபடங்களைப் பார்த்துத்தான் விவாஹம் தீர்மானிக்கவேணுமாம், அந்த விவாஹமுறைகளையும் எந்த மாஸத்திலாவது ருதுவான நான்காம்தினம் பகல் 10மணிக்கு ஆரம்பித்து 12 மணிக்குள் முடித்துவிடவேண்டுமாம்.

இவர் விதவாஸ்திரீவிஷயத்திலும், ஸ்திரீயைஇழந்த புருடன் விஷயத்திலும் மிகக் கருணையுடன் நியோகம் (புணற்சி) செய்ய சில விதிகளை கல்பித்திருக்கிறார். அவைகளை தர்மாத்மாக்கள் மனதிலும் நினைக்கக்கூடாததுபற்றி இங்கு எழுதாமல் விட்டோம்.

இவர் சிலவிடத்தில் ஜாதிவித்தியாஸமில்லையென்றும் மற்றோரிடத்தில் பிராம்மண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர்கள் என்றும் இதில் சூத்திரர்கள் வேதமந்திரஸம்ஸ்காரமில்லாதவர்கள், வேதாந்த விசாரத்திற்கு அர்ஹதையில்லாதவர்களென்றும் முன்னுக்குப்பின் முறணாகக் கூறுகிறார்.

ஓரிடத்தில் தன் பிரவர்த்தியால் பிராமணன் சூத்திரனாகலாம் சூத்திரன் பிராமணனாகலாம் என்கிறார். புராணங்கள் கட்டுக் கதைகளாம், இவ்விதமெல்லாம் வேதம் ஸ்மிருதி புராணங்களைக் கொலைசெய்து துர்வாதத்தில் நிலையாய் ஜீவித்திருக்கும் காலத்திலேயே கல்கத்தாவில் அனேக பண்டிதகனவான்கள் சபைகூடி 1881-ம் வருடத்தில் இவர்சொல்வது யாவும்வேதவிருத்தமானது என்று தீர்மானித்துவிட்டார்கள்.

மேலும் ஒரு சமயம் காசியில் 300 பண்டிதர்கள் இவருடன் வாதம்செய்து கடைசியாக இவரை ஜாதிப்பிரஷ்டரெனத் தீர்மானித்தார்கள். இந்த பிருஷ்டமானது இவரது வியாதிக்கு முக்ய காரணமாய் நேர்ந்தது. இம்மாதிரியான கொள்கைகளைக்கொண்ட மதமே "ஆரியசமாஜம்" என்று ஸனாதனதர்மாபிமானிகளறிந்து கொள்ளவேணும்.

வேதசாஸ்தர, புராணமூலமான ரிஷிகளின் தர்ம்மமார்க்கத்தையே மனிதர்கள் கடைபிடித்து நடக்கவேண்டும். அதுவேநியாயமார்க்கமாம், இம்மார்க்கத்தில் ஈசன் நித்யவாசம்செய்கிறார் என்பது மதசித்தாந்தம், இக்காரணம்பற்றியே நம் "ஆரியமதம்" இன்னும் பிரகாசித்துவருகிறது. நியாயமார்க்கமாய்ச் சொல்லுகிறவனுக்கு ஈசன் துணைபுரிகிறார்.

" यान्ति न्यायप्रवृत्तस्य तिर्यञ्चोऽपि सहायताम् ।
अपंथानन्तु गच्छन्तं सोदरोऽपि विमुञ्चति ॥"

நியாயவழி நடப்பவனுக்கு திர்யக்ஜாதிகளான பிராணிகளும் ஸஹாயம் செய்கின்றன. மார்க்கம் தவறி நடப்பவனை உடன்

பிறந்த தம்பியும் கைவிடுகிருன். நியாயகாமியான ராஜனொருவன் காலகதியால் சத்துருராஜனைக்கண்டு பயந்து ஜீவாக்ஷணத்தின் பொருட்டு வனத்தில் புகுந்தான். அவனைச்சத்துரு தூதர்களும் பின்துடர்ந்தார்கள். ராஜன்வனத்தில் ஓர் குகையைக்கண்டு அதனுள் ஒளிந்தான். அச்சமயத்தில் ஈசனே திரியக் ஜந்து (சிலந்தி) வடிவமாகத்தோன்றி அதிவேகமாக அக்குகையின் வாயிலைத்தன் வலையால் மறைத்துவிடவே, தூதர்களும் அக்குகையினருகில் வந்தபோது இச்சிலந்தி வலையால் இக்குகையில் வெகுகாலமாகப் பிராணிகளின் வாசமில்லை, எனெனில் பிராணிகளின் வாசமிருந்தால் சிலந்தி வலைகட்ட நியாயமில்லை என்று தீர்மானித்து வந்த வழியே சென்றுர்கள். ஈசனருளால் ராஜனும் ஜீவபயம் விலகி சுகம் பெற்ருன். இச்சரித்திரம் சுலோகத்தின் முற்பாதியை விளங்கச்செய்கிறது. துன்மார்க்கத்தில் சென்றவனை உடன் பிறந்தவனும் உபேக்ஷித்துவிடுவான்என்பதற்கு இராமாயணத்தில் ராவண, விபீஷண, வாலி, சுக்கிரீவன் சரித்திரங்களாலும் துரியோதன, பாண்டவர் இவர்களுடைய பாரதசரித்திரத்தாலும் நன்கு அறிந்திருக்கிறேம். இச்சரித்திரங்கள் சுலோகத்தின் பின்பாதியை உறுதிசெய்கிறது. இதனுல் “நியாயமார்க்கம் நலமளிக்கும்” என்பது சித்தம்.

நமது மஹிமை வர்ணுசிரமதர்மநியமத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. எவ்விதமெனில் ஈசனுல் ஜாதிவர்ணுச்ரமங்களும் அதற்குற்ற தர்மநியமங்களும் விரிவாய் வகுக்கப்பட்டிருக்கின்றன. இந்த தர்மநியமமானது ஆரோக்யத்தைக் கருதின ரோகிக்கு மித்திரனுன ஔடதம் போலவாம். மனிதனுக்குஜன்மங்களும் ரோகங்களும் அனேகம் அதுபோலவே ஜன்மலாபமார்க்கங்களும் ஔடதங்களும் பலவாம். ரோகியின் சுகத்திற்குத்தக்க ஔடதங்களும் அதற்குற்ற பத்தியங்களும் எவ்வளவு முக்கியமென்று வைத்யன் ஏற்படுத்துகிருனே, அதுபோலவே ஜன்மலாபசுகத்திற்கு, தக்க வர்ணுசிரம தர்ம்ம நியமங்களும் நமக்கு முக்கியமென்று ஈசன் கல்பித்திருக்கிருர். ரோகி, தன்ரோகநிதானத்தையறிந்துமிகஜாக்கிரதையாய், வைத்தியனின்சொல்படி பத்தியநியமத்துடன் ஔடதம் உட்கொண்டால் சுகம்பெறுகின்ருன். இதில் ஏதாவதுநியமம் தப்பிவிடும் விஷயத்தில் ஆபத்தையடைகிருன் என்பதுபோல தன் வர்ணுசிரமாகநியத்தையறிந்து மிகஜாக்கிரதையாய், அதற்

குற்ற தர்ம்மநியமத்தை ஈசனுஞ்ஞைப்படி ஆசாரமாய் நடந்து வந்தாலவன் சுகம்பெறுகிறான். அதன்றியாரும் எதுவும் செய்யலாமென்று நியமவிதிதப்பி நடக்கும்பட்சத்தில் ஆபத்தையே விளைவிக்குமென்பதில் ஐயமில்லை.

ரோகிக்கு வுஷதம் ஆவசியம். ஔடதம் இருக்குமிடமோ ஆஸ்பத்திரி(hospistal) ஔடதம் அருந்த எண்ணம்கொண்டே ரோகி ஔடதஸ்தானமான ஆஸ்பத்திரியில்ச்சென்று தன்ரோகத்திற்குள்ள ஔடதத்தையறியாமல், எல்லாம் ஔடதம் என்ற உத்தேசத்துடன் தனக்குத் தோன்றியதில் எதாவதொன்றை எடுத்து உட்க்கொண்டுவிட்டால் தன் ரோகமும் விலகாமல் விபரீதரோகமும், அதனால்ாபத்தும், நாசமும் வறக்கூடுமென்பதில் சந்தேகமில்லை. அதுபோலவே "வர்ணாசிரம" தர்ம்மநியமங்கள் "வேத, ஸ்மிருதி, இதிஹாஸ புராணங்களில் நிறைந்திருக்கின்றன. அதில் நாம் எந்த வர்ணாசிரமத்தில் சேர்ந்தவர்கள். இவைகளில் நமக்குற்றதர்ம்மம் யாதெனவறியாமல் தோன்றியபடி எதாவது தர்மங்களை. இஷ்டப்படி ஆச்ரயிப்பதனால் அது தன் விதிதப்பிநடத்த குற்றத்திற்கும் அன்யதர்ம்மத்தைஅபஹரித்ததோஷத்திற்கும் ஈசகோபத்திற்கும் காரணமாய் அதனால் கதியற்று "அலைகடல் துரும்பு" போல் தவிக்கநேரும் என்பதும் உண்மை.

" वर्णानामाश्रमाणाञ्चमर्यादामयाकृता "

வர்ணாசிரமங்களுக்குமரியாதையானது என்னால்செய்யப்பட்டிருக்கிறது என்று பகவான் கட்டளைசெய்திருக்கும்போது, இதைத் தப்பிநடக்க எந்த மனிதனுக்கும் முடியாதகாரியமாய், ஈசனுஞ்ஞையின்படியே நடக்கவேணும தன்னிஷ்டப்படி நடந்தரோகி நாசமடைவான் என்பதுபோல தன்னிஷ்டப்படிநடக்கும் மனிதனும் சுகம்பெறமாட்டான் வர்ணாசிரமதர்ம நியமங்களுக்குக் கட்டுப்பட்டநாம் ஈசன்கட்டளையை உறுதியாய் ஆசரித்தேதீரவேண்டும்.

நாம் இதுவரைச் செய்துவந்தகுணதோஷ பரிசிலனத்தினால் நமக்குக்கிடைத்தலாபம்யாதெனில் 'ஆரியசமாஜிகளுக்கு, வேதம், சாஸ்திரம், ஸ்மிருதி, புராணம், சாதியாசாரம், அனுஷ்டானம், சிராத்தம், தீர்த்தாடனம், க்ஷேத்திரகமனம், விக்கிரகாராதனம்'' இவைகளில் நம்பிக்கையில்லைஎன்பதும்தவிர சாஸ்திர விருத்தமான "ருதுமதீவிவாஹம், விதவாநியோகம், சுயம்வரம், ஸ்திரீஸ்வாதந்திரியம், இரண்டுமணிநேரத்தில் எந்த ருதுவிலும் உத்தேசித்த

ஸமயத்தில் விவாஹம்" இவைகள் அவர்களது முக்கிய கொள்கை என்பது நன்கு விளங்கிவிட்டது.

உலகில் வயிற்றுப்புழைப்பைக்கருதி பலரும், கீர்த்திக்காக சிலரும், தேசஸேவை என்று இன்னும் பலரும் சுதந்திரமோகவலையில் சிக்கிக்கொண்டவர்களாய் ஸநாதனமதத்தின் ஆசாரஸாரங்களையறியாமல் இஷ்டப்படி நடக்க மனங்கொண்டு துராசாரங்களில் சென்று பலரும் அவதிப்படுகிறார்கள் என்பது உண்மை. இவ்வழியாக யாதொரு சுகமும் பெறமுடியாதென்பது சாஸ்திர சித்தம். தார்மிகர்களே! ரிஷிகளின் மார்க்கத்தில் தெய்வசக்தி பரிபூர்ணமாய் நிறைந்திருக்கிறபடியால் அதையனுஸரியுங்கள். அருமையான மனிதஜன்மத்தைக் கருதியாவது மஹரிஷிகளின் மார்க்கத்தைக் கடைப்பிடித்தொழுகவேண்டியது ஒவ்வொரு மனிதனுடைய கடமையாம்.

இம்மதத்தில் இல்லாதது எம்மதத்திலும் இல்லையென்பது உண்மை. 'ஆரியஸமாஜம்' நமது ஆசாரவிருத்தமானதுபற்றி ஒருபொழுதும் அதை ஆசரிக்காதீர்கள். அதோகதி மார்க்கமென உறுதிசெய்துகொண்டு விலக்குங்கள். உலகிலுள்ள தூர்மதங்களைத் துலைத்து ஸாரமான ஷண்மதங்களை ஸ்தாபித்த ஸ்ரீமதாசாரியாளை அனுசரித்துச்செல்லுங்கள் ஆசாரியாளின் மதமே 'ஆர்யமதம்' இதுவே ஸ்ரீசங்கரபகவத்பாதபூஜ்யாளின் கட்டளை. ஷண்மதங்களையும் நிலைநிறுத்தின மகான்களுக்கு மதவிஷயமாய் பரிபூர்ண ஸ்வாதந்திரியம் எக்காலத்திலுமுள்ளதென்று அடிக்கடி ஞாபகத்தில் வையுங்கள். சாஸ்திரமார்க்கத்திற்கு சங்கரமூர்த்தியே சகாயம் செய்கிறார். சுபம்.

பண்டிட் சர்மா.

---

# ஸத்வித்யா தூர்த்தசை.

ஐய, அறிஞர்மணிகாள்! சிற்றிங்கு கவனியுங்கள்! எல்லோர்களும் பிறர் மதம் இம்மை மறுமைப்பயன்களையும் சுகங்களையும் விளைக்குமென்று நினைக்கின்றார்கள். அது தங்கள் தருமத்தின் மேன்மையையறியாததினால் உண்டாகிறதென்பது தங்களுக்குத்

தெரிந்தவிஷயமே. தன்தன் தருமத்தில் முயற்சியுள்ளோரிறப்பதும் நன்று. பிறர் தருமத்தை யனுஷ்டிப்பது நன்றன்றெனச் சாஸ்திரங்கள்யாவுமொரே தாத்பரியமாய் முறையிடுகின்றன. அங்ஙனமே பகவற்கீதையில்—"குணமற்றதாயினும் தன் தருமத்தை யனுஷ்டிப்பது நலம். அன்னியர் தருமத்தை யனுஷ்டிப்பது நலமாகாது. தன் தருமத்திலிருந்துகொண்டிருப்பதும் நன்று. அன்னியதருமம் மரணத்தைக்காட்டிலுமதிக பயத்தை உண்டுபண்ணும். பிறர் தருமத்தையாசரிப்பதால் யாதொரு பயனுமில்லாமற் போவதுடன் பலவிதமான நரகங்களையடையவேண்டும்" என்பது தெளிவாகும். சாஸ்திரங்களைக் கற்றுணர்ந்தவர்களும் இம்மை மறுமைப்பயன்களையுண்டுபண்ணுவதிற் கற்பகம்போன்ற தன் தருமத்தைவிட்டு அனேகம் பிறப்புக்களில் சம்பாதித்த புண்ணியங்களையழிப்பதான பிறர் தருமத்தை யனுஷ்டிக்கிறார்கள். பிராமணர்களுக்கு யாகம் முதலியவைகள் தருமமாக விதிக்கப்பட்டிருக்கிறது. அவைகளைச் சாஸ்திரமுறைப்படி அனுஷ்டித்தால் சுவர்க்கம் முதல் மோக்ஷம்வரையுள்ள பாக்கியங்களையனுபவிக்கலாம். அங்ஙனமே பகவற்கீதையில் "பிரமன் யாகங்களுடன் பிரஜைகளைச்சிருஷ்டித்து இந்த யாகத்தாலிஷ்டத்தைப்பெறலாம். இதுவே உங்களிஷ்டத்தையெல்லாம் கொடுக்கும்" என அவர்களைப்பார்த்துச்சொன்னார். இந்த யாகங்களை அதற்குரிய காலங்களில் செய்தால் விசேஷபலமுண்டாகும். இவைகளை விதிப்பதற்காகவே வேதமெல்லாம் பிரவர்த்தித்தன. அங்ஙனமே பாஸ்கராசாரியர் கிரககணிதத்தில் "வேதங்களெல்லாம் யாகத்திற்காகப் பிரவர்த்தித்தன. அந்த யாகங்களெல்லாம் காலத்தையனுசரித்து ஏற்பட்டிருக்கின்றது. அக்காலங்களை இச்சாஸ்திரத்தாலறியவேண்டுமாகையால் சோதிட சாஸ்திரம் வேதாங்க" மென்று சொல்லப்பட்டது. யக்ஞமென்பது பஞ்சமகா யக்ஞங்களுக்கும் பொதுப்பெயராம். ஆயின் கருணைபொருந்திய நம்முன்னோர்கள் இவைகளின் காலங்களை நிச்சயப்படுத்த சோதிடசாஸ்திரங்களை நன்றாயாராய்ந்து அதின் சாரத்தைத் திரட்டிப் பஞ்சாங்கமென்றேற்படுத்தினார்கள். அப்பஞ்சாங்கங்களுமிப்பொழுது ஒவ்வொருவரால் வெவ்வேறு விதமாகப் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது, அவைகளையும் வேதமார்க்கத்திலிருப்பவர்கூட நம்புகிறார்கள். திருக்ஸித்தமான கெணனவிதிப்படி கெணிக்கப்பட்ட கிரகணாதிகள் பிரத்

தியக்ஷத்திற் கொத்துவருவதைக்கண்டு அதில் நம்பிக்கையால் திருக்கெணிதபஞ்சாங்கத்தை யனுஷ்டிப்போரிடங் கோபங்கொண்டு பெருமூச்சு விடுகிறார்கள். இதற்குக்காரணம் கன்மத்தில் சிரத்தையில்லாமைதான். ஆனதுபற்றி எதிலையின்றி வருகிறதோ அப்பஞ்சாங்கம் கெட்டதானாலும் முன்னோர்களனுஷ்டித்தபடியாவிதுதான் சிலாக்கியமென்று நினைக்கின்றார்கள். அப்பஞ்சாங்ககெணகர்களின் ஜாதிபேதங்களையும் அவர்கட்குச் சோதிடத்தில் அதிகாரமில்லையென்பதையும் அச்சாஸ்திரத்திற் கொஞ்சமேனும் ஞானமில்லையென்பதையுமறியவில்லை, பஞ்சாங்கம் பிசகானால் கெணித்தவர்களின் குற்றமேயல்லது அது சரியன்றேயனுஷ்டித்தவர்களுக்கு யாதொரு குற்றமுமில்லையென்று சிலர் அபிப்பிராயங்கொண்டிருக்கிறார்கள். ஒருவன் நீ கிணற்றில் விழுவாயாகில் உன்னிஷ்டமெல்லாம் கைகூடுமென்று சொல்லக்கேட்டு அப்படி விழுவானாகில் வாய்மூக்கு முதலியவிடங்களில் ஜலம் புகுந்து துன்பமுண்டாவது விழுந்தவனுக்கா சொன்னவனுக்காவென்று ஆலோசித்துப்பாருங்கள். சொன்னவனுக்கும் துன்பமுண்டு. அது இருக்கட்டும்: பிறகல்லவா உண்டாகப்போகிறது. விழுந்தவுடனே யாருக்குத்துன்பமுண்டானதாகக் காணப்படுகிறது? மற்றுஞ்சிலர் திதிமுதலியவைகளுக்கு வாக்கியபஞ்சாங்கமும் கிரகணதிகள் பிரத்தியக்ஷத்திற்கொத்துவருகிறபடியால் திருக்கெணிதபஞ்சாங்கமும் கிராஹியமென்று நினைக்கிறார்கள். அதுவும் விசாரிக்குமிடத்துப் பிசகுதான். பின்னும் சிலர் கிரகணாதிகள் பிரத்தியக்ஷத்திற்கொத்துவருவதைக் கண்டிருந்தும் என் தகப்பன் வெட்டிய கிணறென்ற அபிமானத்தால் உப்புத்தண்ணியைக்குடிப்பதுபோல் இது பெரியோர்கள் அனுஷ்டித்தது பிசகானாலும் எங்களுக்குக் குற்றமில்லையென்றதையே அனுஷ்டிக்கின்றார்கள். அதை நம்பி இவர்கள் கன்மா செய்வதாயிருந்தால் கருமலோபம் வருமென்பது திண்ணம். சூரியகிரகணத்திற்கு முதலிலும் நடுவிலும் முடிவிலும் ஸ்நானம், தானம், ஜபம் முதலியதுகளைச் செய்யவேண்டுமென்று ஸ்மிருதிபுராணங்கள் கூறுகின்றன. அங்ஙனமே வைத்யநாததீக்ஷிதீயம் ஆன்ஹிககாண்டத்தில் கிரஹணஸ்நானப்பிரகாணத்தில் கிரஹணத்திற்கு ஆரம்பகாலத்தில் ஸ்நாநத்தையும், மத்தியகாலத்தில் ஹோமத்தையும், மோக்ஷத்திற்கு ஆரம்பிக்கும்பொழுது தானத்தையும், மோக்ஷமானவுடன் ஸ்நானத்தையும்

செய்யவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ப்ரம்மகைவர்த்தத்திலுமிங்ஙனமே சொல்லப்பட்டிருக்கிறது. ராஹுவென்று வேறு பெயருள்ள பூச்சாயையால் சந்திரனும், சந்திரனால் ஸூர்யனும் மறைக்கப்படுவதே கிரஹணமாம். அங்ஙனமே பாஸ்கராசாரியார் கிரகணிதத்தில் சந்திரக்கிரஹணாதிகாரத்தில் சொல்லியிருக்கின்றார். இந்த ராஹு சந்திரபாதமென்னும் சொல்லப்படுவான். அங்ஙனமே அவர் பிரத்தியப்தசுத்தியில் சொல்லியிருக்கிறார். அந்த சந்திரபாதங்களிரண்டுண்டு. அவைகளிலொன்றுக்கு ராஹுவென்றும், மற்றொன்றுக்குக் கேதுவென்றும் பெயர். இவர்களுக்கெப்பொழுதும் ஆறுராசி விலக்கமுண்டு. இவர்களில் யாராவது ஒருவரால் மறைக்கப்படுவது கிரஹணம். இதனால் சூர்யசந்திரர்கள் பாதத்தில் மறைபடுவது கிரஹணமென்றேற்பட்டது. இவ்விருதத்தைக் கெடுக்கும் சுபாவமுள்ள சிலர் ராகுக்கிரஸ்தந்தான் புண்ணியகாலம். கேதுக்கிரஸ்தம் புண்யகாலமாகாதென்று அக்காலத்தில் செய்யவேண்டியஸ்நானாதிகளை விட்டுவிட்டார்கள். அவர்கள் நாஸ்திகருக்கு ஸஹோதரர்களென்றறியுங்கள். வெகுவாக ராஹுக்கிரஸ்தமே சொல்லப்பட்டிருக்கிறபடியால் அப்பொழுது அனுஷ்டிக்கவேண்டியதவசியம். கேதுக்கிரஸ்தமொரு இடத்திலும் சொல்லப்படாமையால் அதற்கொன்றுமனுஷ்டிக்க வேண்டியதில்லையெனச் சொல்வது நியாயமல்ல. ஏனெனின் ராகு கேது இவர்கட்கும் பாதத்திற்கும் பேதமில்லாதபடியால் வெகுவாய் ராஹுக்கிரஸ்தமென்றே சொல்லப்பட்டிருக்கிறது.

(தொடரும்) ஓர் சோதிடாபிமானி.

---

# "க்ஞானோபாஸ்திஸ்வரூபம்"

ஆஸ்திகர்களே!

இவ்விஷயம் மிகக்கடினமானதால் ஸாவதானமாக வாசிக்கும்படி வணக்கமாய்ப்பிரார்த்திக்கிறேன். புருஷார்த்தங்களுக்குள் மோக்ஷமே மேலானதென்பது மோக்ஷவாதிகளனைவராலுமங்கீகரிக்கப்பட்டவிஷயம். ஜீவாசிகளை ஜன்மமரணாதி பந்தத்தினின்றும் விடுபட்டு பேரின்ப வீடுசேரும்படி செய்வதற்காகவே ஸகல ஸமயங்களும் பிரவர்த்தித்திருக்கின்றன. ஆனால், மோக்ஷ ஸ்வரூ

பத்திலும், அதனுபாயங்களிலும்தான் மதவாதிகளுக்குள் கல
கமெல்லாம். உபனிஷத்வாக்கியங்களைப் பிரமாணமாக ஒப்புக்கொ
ண்ட வேதாந்திகளோவெனின் மோக்ஷ ஸாதனமாக கர்மயோ
கம், உபாஸனுயோகம், க்ஞானயோகம் என்ற மூன்று ஸாதனங்
களைமட்டிலும் வேதஸித்தமாக அங்கீகரித்திருக்கின்றார்கள்.
இம்மூன்று ஸாதனங்களில் கர்மயோகம், உபாஸ்தியோகம், இவ்
விரண்டும் மோக்ஷத்திற்கு பாம்பாரகாரணமாகுமென்றும், க்ஞா
னமொன்றுமட்டிலும்,மோக்ஷத்திற்கு ஸாக்ஷாத்காரணமென்றும்
வேதாந்தஸித்தாந்தம், வேதாந்தங்களில் க்ஞானயோகத்தால்
தான் மோக்ஷம்ஸித்திக்கும் என்பதற்குப் பலவாக்கியங்களுண்டு.
அவ்விதமே, கர்மோபாஸனுதிகளால் மோக்ஷம் ஸித்திக்கமாட்டா
தென்பதற்கும், பலவேதாந்தவாக்கியங்களுண்டு. கர்மம், உபாஸ
னமிவ்விரண்டும், மோக்ஷத்திற்கு ஸாக்ஷாத்காரணமாக வேதாந்த
ஸித்தமில்லையென்பினும், ஆத்மதத்வக்ஞான நிஷ்டையை ஸம்பா
தித்துக்கொடுப்பது மூலமாக, பாம்பாரகாரணமென்பது வேதாந்த
ஸித்தாந்தமேயாகும்.

"கர்மயோகம் முக்திக்குக்காரணமில்லை" என்ற சாஸ்திரக்ஞ
வாதத்திற்கும் ஸாக்ஷத்காரணமில்லை என்று தானர்த்தமயன்றி,
பாம்பாரகாரணமுமில்லை என்று அர்த்தமில்லை. கர்மாவிற்கு முக்தி
காரணத்வமில்லை என்னுமிவ்ஷயத்தை பூர்வமீமாம்ஸகர்களொத்த
விற மற்ற மதஸ்தானைவரும் நிச்சயமாக ஒப்புக்கொண்டுவிட்
டார்கள். ஸ்ரீமத்பகவத்பாதஸமானகாலத்திலவதரித்த ஸமயாசி
ரியர்களுக்குமிந்த விஷயம ஸம்மதமேயாகும். ஆகவே கர்மா ஆத்
மதத்துவ க்ஞானத்தை உண்டுபண்ணுமேயன்றி, மோக்ஷத்தை
யுண்டுபண்ணுது என்பது விவாத மில்லாத விஷயம்.

இவ்விதமே, உபாஸனத்துக்கும், மோக்ஷத்தையுண்டுபண்
ணுவதில்லை, ஸாக்ஷாத்காரணத்வமில் பாம்பாரகாரணத்வந்தா
னுண்டென்பதும் சுருதிஸ்மிருதி பிரும்மஸூத்திராதிப்பிரமாணப்
பிரஸித்தமேயாகும்.

உபாஸகர்களுக்கு பசுத்வம் (ஸம்ஸாரியின் தன்மை) விலகு
வதில்லை என்ற பிருஹதாரண்யகோபனிடதவாக்கியத்தால், உபா
ஸனம் மோக்ஷ ஸாக்ஷாத்காரணமில்லை என்று புலப்படுகின்றது.
உபாஸகர்களுக்கு பசுத்வம் விலகுவது இல்லை என்றதால், உபாஸ

னையால் பசுத்தன்மை ஜீவர்களுக்கு விலகமுடியாதென்றேற்படு கின்றது. பசுத்வம், என்றால் ஜீவத்தன்மை என்று பொருள். ஜீவத்தன்மை ஜீவர்களுக்கு விலகுவதுதான் ஜீவன்முக்தியென்பது. இத்தகைய முக்திக்கு உபாஸனம் முக்கியோபாயமாகாதென்பது இவ்வாக்கியத்தினர்த்தமல்வா?

அன்றியும், ஸ்ரீமத்பகவத்கீதையில்

दूरेणह्यवरंकर्म बुद्धियोगाद्धनंजय ।

என்பதாதிசுலோகங்களால் கர்மோபாஸனங்களால் மோக்ஷஸித்தியில்லை என்ற விஷயம் நிரூபிக்கப்பட்டுளது. தத்வக்ஞான வாயிலாக கர்மோபாஸனமிரண்டும் மோக்ஷகாரணமேயன்றி வேறாக வல்லவென்பதும்

बुद्ध्या युक्तो यया पार्थ कर्मबंधं प्रहास्यसि ।
मद्भक्त एतद्विज्ञाय मद्भावायोपपद्यते ।

என்ற கீதாவசனங்களாலேயே ஸித்தம். இவ்வாறே சாரீரக மீமாம்ஸாஸூத்திரத்திலும் 'वतएवचाग्नींधनाद्यनपेक्षा' என்ற ஸூத்திரத்தால் "தத்துவஞானமானது மோக்ஷத்தை உண்டுபண்ணுவதற்காக கர்மாவைக் கடாக்ஷத்தாலுமெதிர்பார்ப்பதில்லை என்றும்

'सर्वापेक्षा च यज्ञादिश्रुतेरश्ववत्' 'कार्यात्यये तदध्यक्षेण सहातः परमभिधानात्'

என்ற ஸூத்ரங்களால் கர்மம், உபாஸனம் இரண்டும் தத்துவஞானமூலமாகத்தான் மோக்ஷகாரணமென்றும் ஸ்ரீமத் பாதராயணாசாரியாள் வியவஸ்தை செய்திருக்கிறார்கள், இதனால் கர்மோபாஸனங்களை மோக்ஷகாரணமாகசொல்லியிருக்கும் வசனங்களுக்கும் பரம்பராகாரணமென்று தானர்த்தமென்பது ஸித்தமாயிற்று.

(தொடரும்)

வி. ஜகதீசுவரசாஸ்திரிகள்.